[1990 சனவரி 23

சேந்தமங்கலம் பகுதியில் குளுக்கோஸ் தொழிற்சாலை.

*5501 திரு. கே. சின்னசாமி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேந்தமங்கலம் பகுதியில் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி ஆவதால் குளுகோஸ் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம் பகுதியில் குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலைஅமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியில் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு வளருகிறது. ஆகவே அரசு குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவினால் அதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். அங்கிருக்கும் ஏழை யெளிய மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, அங்கே குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கு மாவு சமீபத்தில் விலை உயர்ந்து இருப்பதன் காரணமாக அதிலிருந்து தயார் செய்யப்படுகின்ற குளுகோசின் விலையைக் காட்டிலும் மற்ற மூலப் பொருளிலிருந்து தயார் செய்யப்படுகின்ற குளுகோஸின் விலை குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து தயார் செய்யப்பட்ட குளுகோஸ் சந்தையில் விற்பனை ஆகவில்லை. எனவே இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் பின்தங்கிய தொகுதியாக, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற தொகுதியாக இருப்பதால் அரசு மறு பரிசீலனை செய்து வரும் ஆண்டிலாவது இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 962 மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.